# செப்டம்பர் - 14 - வியாழன்
## திருச்சிலுவையின் மகிமை

### முதல் வாசகம் : எண்ணாகமம் 21: 4 – 9

அக்காலத்தில் ஏதோம் நாட்டைச் சுற்றிப்போகும்படி ஓர் என்ற மலையிலிருந்து அவர்கள் "செங்கடல் சாலை" வழியாகப் பயணப்பட்டனர் அவ்வழியை முன்னிட்டு மக்கள் பொறுமை இழந்தனர்.மக்கள் கடவுளுக்கும் மோசேக்கும் எதிராகப் பேசினர் "இந்தப் பாலைநிலத்தில் மாளும்படி எங்களை எகிப்திலிருந்து கொண்டு வந்தது ஏன்? இங்கு உணவுமில்லை, தண்ணீருமில்லை, அற்பமான இந்த உணவு எங்களுக்கு வெறுத்துப் போய்விட்டது" என்றனர்.உடனே ஆண்டவர் கொள்ளி வாய்ப் பாம்புகளை மக்களிடையே அனுப்பினார் அவை கடிக்கவே இஸ்ரயேல் மக்களில் பலர் மாண்டனர்.அப்போது மக்கள் மோசேயிடம் வந்து, "நாங்கள் பாவம் செய்துள்ளோம்" நாங்கள் ஆண்டவருக்கும் உமக்கும் எதிராகப் பேசியுள்ளோம் அவர் இந்தப் பாம்புகளை அகற்றி விடும்படி நீர் ஆண்டவரிடம் வேண்டிக் கொள்ளும்" என்றனர். அவ்வாறே மோசே மக்களுக்காக மன்றாடினார்.அப்போது ஆண்டவர் மோசேயிடம், "கொள்ளி வாய்ப் பாம்பொன்றைச் செய்து அதை ஒரு கம்பத்தில் பொருத்து. கடிக்கப்பட்டோரில் இதைப் பார்க்கிற ஒவ்வொருவனும் பிழைப்பான்" என்றார்.அவ்வாறே மோசே ஒரு வெண்கலப் பாம்பைச் செய்து அதை ஒரு கம்பத்தில் பொருத்தினார் பாம்பு கடித்த எந்த ஒரு மனிதனும் இந்த வெண்கலப் பாம்பைப் பார்த்து உயிர்பிழைப்பான்.

**பதில்பாடல் :** இறைவனின் செயல்களை மறவாதிருங்கள்

### இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 2 : 6 - 11

சகோதர சகோதரிகளே! கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை.ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி,சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்.எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர். தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக "இயேசு கிறிஸ்து ஆண்டவர்" என எல்லா நாவுமே அறிக்கையிடும்.

### நற்செய்தி : யோவான்3 : 13 – 17

அக்காலத்தில் இயேசு சீடர்மீது தம் பார்வையைப் பதித்துக்கூறியவை:"விண்ணகத்திலிருந்து இறங்கி வந்துள்ள மானிட மகனைத்தவிர வேறு எவரும் விண்ணகத்திற்கு ஏறிச் சென்றதில்லை. பாலைநிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டது போல மானிடமகனும் உயர்த்தப்படவேண்டும். அப்போது அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர். தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார். உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம்மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார்" என்றார்.

**தியானம்:** எல்லோருக்கும் வழிகாட்டியாக, பாவக் கறையகற்றும் படிக்கல்லாக, விண்ணகத்தின் பரிசுத்த ஏணியாக மாற்றமடைந்த புனிததிருச்சிலுவையின் மகிமை விழா இன்று. இறைமகன் கிறிஸ்துவின் காலத்தில் அவமானத்தின் சின்னமாக சிலுவை மரம் கருதப்பட்டது. எனினும் இறைமகனின் திரு உடல் சுமத்தப்பட்டதால் பாவத்தின் சின்னம் பரிசுத்த சின்னமாக மாற்றமடைந்த மாபெரும் மகிமையை நினைவுகூரும் நாள் இன்றைய நல்ல நாள். "மனித உருவில் தோன்றி சிலுவைச் சாவை ஏற்கும் அளவிற்கு தம்மையே தாழ்த்திக் கொண்டவரை எப்பெயருக்கும் மேலான பெயராக" இறைமகன் இயேசு உயர்த்தப்பட்டார். எமது வாழ்வில் மாபெரும் மகிமையைப் பெற்றுக் கொடுத்த திருச்சிலுவை மரத்தை நாம் எந்த அளவில் மதிக்கின்றோம் என்பதனை சிந்திக்க இன்றைய நாளின் வாசகம் எம்மை அழைக்கின்றது. இந்த உலகத்தின் சரித்திர வரலாற்றில் எங்குமே எழுதப்படாத புனித வராலாறு எழுதப்பட மனித இனத்தின் பாவக்கறைகள் கழையப்பட திருச்சிலுவைமரம் பயன்பட்டது. அன்று மோசேயால் பாலை நிலத்தில் பாம்பு உயர்த்தப்பட்டது போல மானிட மகனும் எமது பாவங்களைக் கழைவதற்காக சிலுவை எனப்பட்ட கழுமரத்தில் ஏற்றப்பட்டார். எனினும், அவரில் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர் என நற்செய்தியில் எமக்கு உறுதிமொழி தரப்படுகின்றது. எமது பாவப் பழக்க வழக்கங்கள், எமது பெலவீனங்கள், எமது குற்றங்குறைகள் அனைத்துமே சிலுவையில் அறையப்பட்டுவிட்டன. அவை அனைத்தினின்றும் எம்மை விடுவித்து இறைமகன் இயேசு வெற்றி கொண்டுவிட்டார் என நம்பி விசுவசிப்போம். அன்று பாலைநிலத்தில் மோசேயால் உயர்த்தப்பட்ட பாம்பினை உற்று நோக்கிய இஸ்ராயேல் மக்கள் குணமாகியது போல, நாமும் சிலுவையில் அறையப்பட்ட இறைமகனை உற்று நோக்குவோம். எமது பாவ வாழ்விலிருந்து விடுதலை பெறுவோம். வெற்றி என்னும் பரிசுத்த வாழ்வை நோக்கி வீறு நடைபோடுவோம்.